**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 1 | **Caste** |
| **Witness Name** | தமிழ்செல்வி | **Calling** |
| **Father's Name** | க/பெ. ரவி | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023.

**எதிரி ஆஜர்**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுாகா, இந்திரா நகரில் வசித்து, வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 28.09.20 அன்று மன்னார்குடியிலிருந்து எனது நாத்துனார் வீட்டிற்காக நானும், எனது மகன் விவேக்நாதனும் புதுக்கோட்டை வந்தோம். 29.09.20 ம் தேதி காலை சுமார் 5.00 மணியளவில் புதுக்கோட்டை பேருந்து நிலையத்திலிருந்து இறங்கி ஆட்டோ பிடிப்பதற்காக சென்றபோது டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டது. மகனுக்கு கை மற்றும் காலில் இரத்தகாயம் ஏற்பட்டது. பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக PMCH க்கு அழைத்து சென்றோம். எனது மகனை பரிசோதனை செய்த மருத்துவர் இறந்துவிட்டதாக கூறினார். இது தொடர்பாக போலீசில் புகார் அளித்தேன். மேற்படி விபத்திற்கு காரணம் ஆஜர் எதிரிதான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

**குறுக்கு விசாரணை –வாய்ப்பளித்தும் இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | | |
|---|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 2 | **Caste** | |
| **Witness Name** | சுப்பையா | **Calling** | |
| **Father's Name** | கருப்பையா | **Religion** | |
| **Village** | | **Age** | |
| **Taluk** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம்,சமுத்துவபுரத்தில் குடியிருந்து, முள்ளூரில் உள்ள அயர்ன் கோச்சில் வெல்டராக பணி புரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 29.09.20 ம் தேதி காலை 5.00 மணியளவில் திருச்சிக்கு சாமான் வாங்க செல்வதற்காக புதுக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு சென்றிருந்தேன். அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த லாரி புதுக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த ஒரு நபர் மீது மோதி அவர் மீது லாரி ஏறி இறங்கியது.அவருக்கு வயிற்று பகுதி மற்றும் காலில் இரத்தக்காயம் ஏற்பட்டிருந்தது. பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் PMCH க்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

**குறுக்கு விசாரணை –வாய்ப்பளித்தும் இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | | |
|---|---|---|---|
| **Deposition Witness** | அ.சா.4 | **Caste** | |
| **Witness Name** | விக்கி | **Calling** | |
| **Father's Name** | ரவி | **Religion** | |
| **Village** | | **Age** | |
| **Taluk** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுாகா, இந்திரா நகரில் வசித்து, பழக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 29.09.20 ம் தேதி காலை நான் பழக்கடையில் இருந்தபோது எனது அம்மா என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு புதுக்கோட்டை பேருந்து நிலையம் அருகே டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது அண்ணன் விவேக்நாதனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு புதுக்கோட்டை PMCH ல் சிகிச்சைக்காக அழைத்து சென்றதாகவும், மருத்துவர் என்னை அண்ணனை பரிசோதித்தபோது இறந்துவிட்டாகவும் கூறினார். உடனே நானும் எனது அப்பாவும் புதுக்கோட்டை PMCH க்கு சென்றோம். போலீசார் என் அண்ணனின் பிரேதத்தை விசாரணை செய்தார்கள். நான் உடனிருந்து அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

**குறுக்கு விசாரணை –வாய்ப்பளித்தும் இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | அ.சா.3 | **Caste** |
| **Witness Name** | செல்வராஜ் | **Calling** |
| **Father's Name** | ஆறுமுகம் | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம்,காமராஜபுரத்தில் குடியிருந்து, சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய ஓட்டுனர் ஆவார்.கடந்த 29.09.20 ஆம் தேதி காலை 5.00 மணியளவில் புதுக்கோட்டை பேருந்து நிலையம் அருகே நான் பார்சல் வாங்குவதற்காக நின்று கொண்டிருந்தபோது டிப்பர் லாரி ஒன்று மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்து சாலையை கடந்து வந்த ஒரு நபர் மீது மோதியதில் அந்த நபருக்கு கால் மற்றும் வயிற்று பகுதியில் டிப்பர் லாரி ஏறி இறங்கியதால் காயம் ஏற்பட்டது. பிறகு 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி PMCH க்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விாசரித்தார்கள்.நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

**குறுக்கு விசாரணை –வாய்ப்பளித்தும் இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 57 /2021**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | **அ.சா.5** | **Caste** |
| **Witness Name** | **அரங்குளவன்** | **Calling** |
| **Father's Name** | **ராசு** | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023.

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், அசோக் நகரில் குடியிருந்து, லாரி டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. அ.சா.1 எனது மைத்துனரின் மனைவி ஆவார். கடந்த 29.09.20 ம் தேதி அ.சா.1 தொலைபேசியில் தொடர்பு கொண்டு புதுக்கோட்டை பேருந்து நிலையத்திற்கு வெளியே டிப்பர் லாரி மோதி விபத்து ஏற்பட்டத்தில் அவரது மகன் விவேக்நாதனுக்கு பலத்த காயம் ஏற்பட்டு, PMCH—ல் சிகிச்சைக்காக அனுமதித்திருந்தாகவும், அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். மருத்துவமனை சென்ற நான் என் மைத்துனர் மகன் விவேக்நாதனின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் பற்றி சொன்னேன்.

**குறுக்கு விசாரணை – வாய்ப்பளித்தும் இல்லை.**